## R 3993 (page 150) (தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி)

## SOME PLAGUED--SOME PASSED OVER

பரிசுத்த ஆவியினால் மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், சத்திய வார்த்தைகள் வாயிலாக அறிவு ட்டப்பட்டவர்களும் மற்றும் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்பட்டவர்களுமான கர்த்தருடைய ஜனங்கள் உலகத்தின் கண்ணோட்டத்தினைப் பெற்றிராமல், மாறாக தங்கள் காரியங்கள் அனைத்திலும் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாய்ச் செயல்பட வேண்டும். இப்படிச் செய்யும் பழக்கத்தினை இக்கட்டுரையினை வாசிக்கும் வாசகனில் யாரேனும் ஒருவன் முற்காலங்களில் கொண்டிராவிட்டால், உடனே அப்படிச் செய்யத் துவங்குவதற்கு நேரம் வந்துவிட்டது. காலம் குறைவாக உள்ளது - இதிலே இப்படியான சரியான கண்ணோட்டத்தினை நாம் வளர்த்திக்கொள்ள வேண்டும் மற்றும் இந்தப் பொன்னான பிரமாணத்தினைப் பயன்படுத்திடுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மை நாம் அன்புகூருவதுபோன்று நமது அயலார்களையும் அன்புகூரும் இந்த அன்பின் அளவினை/நிலைப்பாட்டினை நமது இருதயங்கள் அடையவில்லையெனில், தேவன் அங்கீகரிக்கும் விதத்திலுள்ள தேவனுக்கான அன்பு எதையேனும் நாம் பெற்றிருக்கின்றோமா என்று நாம் ஐயம் கொண்டிட வேண்டும் என்று அப்போஸ்தலன் நமக்கு உறுதிப்படுத்துகின்றார் (1 யோவான் 4:20).

**R3994 : page 151**

உண்மைதான் அநேகர் பார்வோனின் ஸ்தானத்தில் காணப்படுகிறதில்லை மற்றும் பார்வோனுடைய ஆலோசகர்கள் மற்றும் எகிப்து தேசத்தினுடைய மற்றச் செல்வாக்குள்ள மனிதர்கள் மத்தியில் நிலவின வேறே ஆவியின் காரணமாய்ப் பார்வோன் இஸ்ரயேலர்களைக் கையாளும் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாதவராக இருந்திருப்பார். இதுபோலவே நாமும்கூட நமது அயலார்கள், தொழிலாளிகள் முதலானவர்களைக் கையாளும் விஷயத்தில் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக நம்மால் செய்யமுடிந்த மற்றும் செய்ய விரும்பும் யாவற்றையும் செய்யமுடியாதவர்களாய்க் காணப்படுவோம்; ஆனால் இந்த ஆவியினை நம் இருதயங்களில், நம் மனங்களில் நாம் வளர்த்தி, விருத்திச் செய்திட வேண்டும் மற்றும் தற்கால சூழ்நிலைகள் அனுமதிப்பதற்கேற்ப முடிந்தமட்டும் அப்பிரமாணத்திற்கு இசைவாய் ஜீவித்திட வேண்டும். நம்மால் நம்முடைய ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தையும் இந்த நியமத்திற்கு இசைவாய்க் கொண்டுவர முடிகிறதோ அல்லது இல்லையோ, நம் இருதயங்கள் இந்த ஓர் இலக்கினை அடைந்திருக்க வேண்டும். இல்லையேல் நிச்சயமாய் எதிர்ப்பார்க்கப்படும் அளவுகோல் நியமத்திற்கு நாம் குறைவுபட்டிருப்போம் மற்றும் இக்காரியத்தினை நாம் சரிசெய்துகொள்ளவில்லையெனில், நமக்கு இராஜ்யத்தில் பங்கிராது மற்றும் கர்த்தருடைய ஏற்பாட்டின்படி தங்கள் கர்த்தரும், தலையுமானவருடன் சீக்கிரத்தில் பு மியின் குடிகளை ஆசீர்வதிக்கவிருக்கும் இராஜாக்களும், ஆசாரியர்களும், நியாயாதிபதிகளுமான அந்த மகிமையான வகுப்பாரில் அங்கமாகிட முற்றிலும் தகுதியற்றவர்களாய் இருப்போம். (1 கொரிந்தியர் 6:2, 3)

---------------------